# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – IV

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

**காலம்** :- 26.04.2016 நண்பகல் 12.00 மணி.

**சமுகமளித்தோர்:-**

- கௌரவ கல்வி அமைச்சர்.
- மாகாணக்கல்விப் பணிப்பாளர், மாகாணக்கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (தென்மராட்சி ,தீவகம் ,முல்லைத்தீவு, துணுக்காய் , கிளிநொச்சி, வவுனியா தெற்கு,வவுனியா வடக்கு, மடு,மன்னார்).
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- கணக்காளர் மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் (மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்).
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்- மாகாணக் கல்வித் திணைக்களம்.
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு.
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் கூட்டத்திற்கு வருகைதந்து மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய நான்காவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். மேற்படி கூட்டத்திற்கு கல்வி அமைச்சின் செயலாளர் அவர்கள் வெளி நாடு சென்றமையால் வருகை தரவில்லை என்பதையும் தெரிவித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.
கடந்த மாதத்திற்குரிய கூட்ட அறிக்கையானது அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்அறிக்கையில் ஏதாவது திருத்தம் இருந்தால் தெரிவிக்குமாறும் கூறினார்.அவ்வாறு திருத்தம் இல்லையெனில் அவ் அறிக்கையினை ஏற்றுக் கொண்டு கூட்டத்தினை தொடர்ந்து நடாத்திச் செல்வதாகக் கூறினார்.

**வேலைகள் மேற்படி விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது. எமக்கு தரப்பட்ட அனுமதிகள் ஒதுக்கீடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட வேலைகள் தொடர்பாக ஏற்கனவே செய்து முடிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். கடந்த வருடத்திற்கான PSDG வேலைத்திட்டம் மிக முக்கியமானது எனவும் மேலும் கடந்த கூட்டத்தில் கடந்த வருடத்தில் செய்து முடிக்கப்படாத மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்குமாறு கூறப்பட்ட வேலைகள் யாவும் முடிக்கப்பட்டுவிட்டதாக கூறப்பட்டது.**

## TSEP வேலைகள்

**கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்,யா/நாவாந்துறை.றோ.க.த.க.பா முடியும் தறுவாயில் உள்ளதாகவும், மு/ஆறுமுகம் வித்தியாலயம்,வ/கனகராயன்குளம் மகாவித்தியாலயம் வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு விட்டன எனவும் பொறியலாளரால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் யா/தம்பாட்டி.அ.த.க.பாடசாலை வேலைகளை முடிப்பதில் சில பிரச்சனைகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது, ஒப்பந்தக்காரர் முறையாக வேலைகளை செய்து முடிப்பதில் கால தாமதம் செய்வதாகவும் கூறினார், கௌரவ கல்வி அமைச்சரால் ஒப்பந்தகாரரை மாற்றும் படி கோரப்பட்ட போது அதில் நடைமுறை சிக்கல்கள் இருப்பதாக கல்வி அமைச்சு பொறியியலாளரினால் கூறப்பட்டது.மேற்கொண்டு அவ்வொப்பந்தக்காரர் மூலம் தான் செய்து முடிக்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார்.**

## PSDG வேலைகள்:-

## Theme 01 வேலைகள் ஆராயப்பட்டது.

**மொத்த வேலைகள் 105, கல்விஅமைச்சின் கீழ் 68 வேலைகள் உள்ளன அவற்றில் 67 வேலைகள் கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும் 44 வேலைகள் கொடுக்கப்பட்டதாகவும் 19 வேலைகள் மதிப்பீட்டில் உள்ளதாகவும் 04 வேலைகள் 03ம் திகதி மே மாதம் கேள்வி கூறு விலைகள் திறக்கப்படும் எனவும், மிகுதி 37 வேலைகள் வலயங்களுக்குட்பட்ட வேலைகள் எனவும் தெரிவிக்கப்பட்டது.**

1) **யாழ்ப்பாண வலயம்:– யா/நல்லூர் சி.சி.த.க.பா மற்றும் யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும், யா/சிறுப்பிட்டி.இ.த.க.பா வேலைகள் யாவும் தொடங்கப்பட்டுவிட்டதாகவும், யா/காசிப்பிள்ளை வித்தியாலயத்திற்கு கேள்விக்கோரல் விடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது.**

2) **வலிகாமம் வலயம்:–யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி கேள்வி விலைக்கோரல் திறக்கப்பட்டது, யா/அராலி சரஸ்வதி வித்தியாலயம் மிகுதி வேலைகள் மதிப்பீடு இன்று (26.04.2016) கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது, யா/யூனியன் கல்லூரி, யா/இனுவில் மத்திய கல்லூரி ,யா/வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம்,யா/நகுலேஸ்வராக் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு கேள்வி கூறு விலைக்கோரல் விடுக்கப்பட்டது.**
**யா/அருணோதயாக் கல்லூரிக்கு கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது. யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்துக்கு 19.04.2016 அன்று கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் பொறியியலாளரால் கூறப்பட்டது, அதற்கு வலிகாம தொழில்நுட்ப உத்தியோகத்தர் தமக்கு அது பற்றிய கடிதம் கிடைக்கப் பெறவில்லை எனக் கூறினார்.**

3)வடமராட்சி வலயம்:-யா/புத்தளைமகாவித்தியாலயம்,யா/நாகர்கோவில் மகாவித்தியாலயம், யா/உடுத்துறை ஆரம்பபாடசாலை யா/கொற்றாவத்தை அ.த.க.பா ஆகிய பாடசாலைகளுக்கு கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் ,யா/குடத்தனை அ.த.க.பா கேள்வி கூறு விலை கோரப்பட்டுள்ளது. யா/தாழையடி றோ.க.த.க.பா இன் மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் பொறியியலாளர் கூறினார்.

4)தென்மராட்சி வலயம்:-யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, யா/ திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலைகளுக்கு கேள்வி கூறு விலை 03.05.2016 அன்று திறக்கப்படுவதாக கூறப்பட்டது.

5)தீவக வலயம்:- 5 வேலைகளில் 4 வேலைகள் கேள்வி கோரப்பட்டுள்ளது. மிகுதி ஒரு வேலையான யா/யாழ்ற்றன் கல்லூரி வேலைக்கான கேள்விக் கூறுவிலை 25.04.2016 திறக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

6)கிளிநொச்சி வலயம்:- 9 வேலைகளில் 7 வேலைகள் வலயத்திற்குட்பட்டது எனவும் இவை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் மிகுதி 2 வேலைகளுக்கு கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

7)முல்லைத்தீவு வலயம்:- 8 வேலைகளில் 7 வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் மிகுதி ஒரு வேலைக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

8)துணுக்காய் வலயம்:- 5 வேலைகளில் 4 வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.

9)மன்னார் வலயம்:- மன்/நானாட்டான் ஆரம்பப் பாடசாலை, மன்/பூநொச்சிக்குளம் அ.மு.க.பா, மன்/தோட்டவெளி றோ.க.த.க.பா, மன்/எருக்கலம்பிட்டி மு.ம.வி ஆகியவற்றிற்கு கேள்வி கூறுவிலை திறக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

10)வவுனியா தெற்கு வலயம்:-11 வேலைகளில் 10 வேலைகளுக்கு கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மிகுதி ஒரு வேலைக்கு கடிதம் கிடைக்கப்பெறவில்லை எனவும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது.

11)வவுனியா வடக்கு வலயம் :- 1 வேலைக்கு கேள்வி கோரப்பட்டுள்ளதாகவும் 1 வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.

## Theme 1.1.2

**ஆசிரியர் விடுதி அமைப்பது தொடர்பாக** மேற்படி விடயம் தொடர்பாக வலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாகவும் வேலைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

1. **யாழ்ப்பாண வலயம் :- யா/செட்டித்தெரு M.M.T.M.S ல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டது. யா/கஜிதா முஸ்லிம் பெண்கள் பாடசாலை வேலைக்கான கேள்வி கோரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.**

2. **வலிகாமம் வலயம் :- 1 வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.**
3. **வடமராட்சி வலயம் :- 1 வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.**
4. **தென்மராட்சி வலயம் :- 1 வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.**
5. **தீவக வலயம் :- 1 வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.**
6. **கிளிநொச்சி வலயம் :- 6 வேலை கேள்வி கோரப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது கூறப்பட்டது..**
7. **முல்லைத்தீவு வலயம் :- 3 ஆசிரியர் விடுதிகளுக்கு கேள்வி கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.**
8. **துணுக்காய் வலயம் :- 1 ஆசிரியர் விடுதிக்கு மதிப்பீட்டு வேலை மேற்கொள்ளவதாக கூறப்பட்டது.**
9. **மன்னார் வலயம் :- 2 ஆசிரியர் விடுதிகளுக்கு வேலைகளுக்கு கேள்விக் கூறுவிலை திறக்கப்பட்டுள்ளதாகவும், மன்/ சிலாபத்துறை அ.மு.க.பா க்கு மே மாதம் கேள்வி கோரப்பட்டு அதே மாதம் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.**

10. **மடு வலயம் :- ம/அந்தோணியர்புரம் றோ.க.த.க.பா , மற்றும் ம/பரப்பான்கண்டல் றோ.க.த.க.பா ஆகிய பாடசாலைகளுக்கும் ஆசிரியர் விடுதி அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாமல் உள்ளமையினால், இவ்வருடத்தில் ம/பரப்பான்கண்டல் றோ.க.த.க.பா க்கு முழு நிதியினையும் வழங்குமாறும் அடுத்த ஆண்டில் ம/ அந்தோணியர்புரம் றோ.க.த.க.பா க்கு வழங்குமாறும் கௌரவ கல்வி அமைச்சரால் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு கூறப்பட்டது.**

11. **வவுனியா தெற்கு வலயம் :- 6 வேலைகளில் 2 வேலைகள் கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் மிகுதி 4 வேலைகளுக்கான கேள்விக் கூறுவிலை திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.**

12. **வவுனியா வடக்குவலயம் :- வவு/புதுக்குளம் கனிஸ்டா வித்தியாலய வேலை கேள்வி ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

## Theme 1.1.3

**ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி தொடர்பாக:-**

மேற்படி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி தொடர்பாக ஆராய்ந்த போது கிளிநொச்சி வலயம் மற்றும் தீவக வலயம் என்பவற்றில் இப் பயிற்சி நெறிக்கான நிகழ்வு சிறப்பாக நடாத்தி முடிக்கப்பட்டதாகவும் ஏனைய வலயங்களான யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், மடு , துணுக்காய் ஆகியவற்றில் நிகழ்வுகள் நடாத்தி முடிக்கப்படவில்லை எனவும் கௌரவ கல்வி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளை ஆகஸ்ட் மாதத்திற்கு முன் நடாத்தி முடிக்குமாறு கௌரவ அமைச்சரால் உரிய வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு கூறப்பட்டது.

**அதிபர்களுக்கான மாநாடு தொடர்பானது :-**

மேற்படி அதிபர்களுக்கான மாநாடு தொடர்பாக ஆராய்ந்த போது இந்நிகழ்வினை மாகாணக் கல்வி அலுவலகத்தினால் நடாத்தப்படும் எனவும் அதிபர்களின் தொகையினைக் கருத்திற் கொண்டு மாநாட்டை ஒழுங்குபடுத்துமாறு கூறப்பட்டது. தரம் I, தரம்II, தரம்III எனப் பிரித்து இந்நிகழ்வினை நடாத்துமாறும் தரம் III இல் அதிபர்கள் அதிக எண்ணிக்கையானோர் காணப்படுமாயின் அதனை இரண்டாகப் பிரித்து நடாத்துமாறும் கௌரவ அமைச்சரினால் கூறப்பட்டது.

## Theme 1.1.4 குடிநீர், மலசலகூட வசதிகள்

சகல வலயங்களுக்கும் கொடுக்கப்பட்ட வேலைகள் யாவும் மே மாத இறுதிக்குள் முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## Theme 1.1.5

**முறைசாரா பயிற்சி நிலையங்கள் அமைத்தல்**

1) யாழ்ப்பாண வலயம்:- 4.8 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 2.8 மில்லியனுக்கு கேள்விகோரப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது, வலயக் கல்வி அலுவலக கணக்காளரால் உபகரண கொள்வனவிற்கான பட்டியல் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.
2) வலிகாமம் வலயம்:- முறைசாரா பயிற்சி நிலையத்திற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது.
3) கிளிநொச்சி வலயம்:- முறைசாரா பயிற்சி நிலையத்திற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது.
4) முல்லைத்தீவு வலயம்:- முறைசாரா பயிற்சி நிலையத்திற்கு கேள்வி கோரப்பட்டுள்ளது.

## Theme 1.1.6- விளையாட்டு முற்றம்

பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட வேலைகள் அப்பாடசாலையின் அபிவிருத்திச்சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் எனவும் , மதிப்பீடுகளுக்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சின் பொறியியலாளரினால் தெரிவிக்கப்பட்டது.

## TSEP

சகல வலயங்களுக்கும் கொடுக்கப்பட்ட பாடசாலைகளுக்குரிய வேலைகள் யாவும் தொடங்கப்பட்டு விட்டதாகவும் 10%-15% நிறைவடைந்த நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.இனிவரும் காலங்களில் முடிக்கப்பட்ட வேலைகளை சதவீதத்தல் காட்டுமாறு கௌரவ கல்வி அமைச்சரினால் கோரப்பட்டது.

**இந்தியன் உதவித் திட்டம்.**

10 பகுதிகளாக(Package) தரப்பட்டது, இதனை 6 பகுதிகளாக(Package) ஆக மாற்றித் தருமாறு கோரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 26 வேலைகள் உள்வாங்கப்பட்டுள்ளது. அதில் 3 வேலைகள் மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாக கல்வி அமைச்சின் பொறியியலாளரினால் கூறப்பட்டது.

## UN HABITAT தொடர்பாக ஆராய்ந்த போது:-

இவ் வேலைத் திட்டங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எனவும் இவற்றில் மன்/அல்-இக்ரா அ.மு.க.பா, மன்/பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்பப்பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலை வேலைகளுக்கான அனுமதி சென்ற வாரம் வழங்கப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டது.

**நிரல் கல்வி அமைச்சு வேலைத்திட்டம் (2015/2016):-**

தேசிய பாடசாலைகள் பற்றி ஆராய்ந்த போது 33 வேலைகளுக்கு 353.5 மில்லியல் அனுமதியளிக்கப்பட்டது. அவ்வேலைகள் 2015 இல் முடிக்கப்பட வேண்டியவை, 2016 க்குள் இவை கட்டாயம் முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில் இவற்றிற்கான நிதி கிடைக்கப்பெறாது என கல்வி அமைச்சின் பொறியியலாளரால் தெரிவிக்கப்பட்டது.

**உலக வங்கி தொடர்பாக ஆராய்ந்த போது:-**

உலகவங்கிக் குழுக் கூட்டமானது 29.04.2016 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாகவும் அக்கூட்டதில் 2013 – 2016 ஆண்டு வரையான பெறுகைத் திட்டம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாகவும் வடமராட்சி வலயத்திற்குரியது மட்டும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஏனைய வலயங்களுக்குரியவற்றை 28.04.2016 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறும் கல்வி அமைச்சின் பொறியியலாளரால் கேட்கப்பட்டது.

- **இலத்திரனியல் கற்கை ( E Lesson) :-**

  பாடசாலை மாணவர்களுக்கான கணித,விஞ்ஞான பாடங்களுக்கான இறுவெட்டு சகல வலயங்களுக்கும் வழங்கப்பட்டதாகவும் இவை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டதா என கௌரவ கல்வி அமைச்சரினால் கேட்கப்பட்ட போது வடமராட்சி, முல்லைத்தீவு வலய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஏனைய வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அவை விரைவில் வழங்கப்படும் என வலயக்கல்விப்பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

- கல்வி மறுசீரமைப்பு பரிந்துரைகள்(RIMP) தொடர்பாக ஆராயப்பட்டது.

- பி.ப 1.42 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.

இ.இரவீந்திரன்

செயலாளர்.

**இ. இரவீந்திரன்**
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்